# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2021
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 3rd Term Term Examination - 2021

FWC

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கணக்கீடு<br>Accounting | | Three Hours<br>Gr -12 (2022) | 33 | T | I,II |

**அறிவுறுத்தல்கள்:-**

- *எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.*
- *01 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிகோட்டின் மீது எழுதுக.*
- *16 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்குரிய சுருக்கமான விடையைப் புள்ளி கோட்டின் மீது எழுதுக.*
- ஒவ்வொரு வினாவுக்கும் சமமான புள்ளிகள் உரித்தாகும்.

**சுட்டெண் :....................................**

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| *01 – 15* | |
| *16 - 25* | |
| மொத்தம் | |

## பகுதி – I

*01.* நிதிக்கூற்றுக்களில் அக்கறை செலுத்தும் பிரிவினர்களுள் அரசாங்கத்திற்கும் அதன் முகவர்களுக்கும் தேவையான தகவல்கள் கீழ்வருவனவற்றுள் எது?

1) தரமான உற்பத்திகள், பொறுப்பு உத்தரவாதத்தை நிறைவேற்றக்கூடிய ஆற்றல்.
2) தொழில் வாய்ப்பு, முதலீட்டின் மீதான ஆபத்து, உள்ளூர் வளப்பயன்பாடு.
3) முதலீட்டின் மீதான ஆபத்து, பங்கிலாபம் வழங்கக்கூடிய ஆற்றல்.
4) தேசிய புள்ளி விபரத் தகவல்கள், வரிமதிப்பீடு,
5) அணமைக்கால அபிவிருத்தி மற்றும் எதிர்கால அபிவிருத்திக்கு எடுக்க வேணடிய தீர்மானங்கள்.

(………..)

*02.* கீழ்வரும் சூழற் காரணிகளுடன் தொடர்புடைய மாறிகளின் சரியான ஒழுங்குமுறை யாது?

| சூழற் காரணிகள் | சூழற் காரணிகளுக்கான மாறிகள் |
|---|---|
| 1) சமூக கலாசார சூழல் | A – நாணய மாற்று விகிதம் |
| 2) தொழில்நுட்பச் சூழல் | B – கணக்கீட்டு நியமங்கள் |
| 3) நுட்பம் மற்றும் தொழில்சார சூழல் | C – தனிநபர் வாழ்க்கைப் போக்கு |
| 4) பொருளாதார அரசியற் சூழல் | D – கணினித் தொழில்நுட்பம் |

1) C, D, A, B  2) A, C, B, D  3) C, D, B, A  4) C, A, D, B  5) C, B, D, A

(………..)

➢ **3ம், 4ம், 5ம், 6ம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

*01.01.2021* இல் சந்திரன் என்பவர் கட்டிடப் பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்றினை மாதாந்த வாடகை ரூபா 10000 செலுத்த வேண்டிய நகரப் பகுதியில் உள்ள கட்டிடம் ஒன்றில் ரூபா *30,00000* மூலதனமிட்டு ஆரம்பித்தார். *2021* ஜனவரி மாதம் நிகழ்ந்த கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு.

| **திகதி** | **கொடுக்கல் வாங்கல்** | **பெறுமதி '000' ரூபாவில்** |
|---|---|---|
| *02.01.2021* | கட்டிட பொருட்கள் கடனுக்கு கொள்வனவு (8% VAT உள்ளடக்கலாக) | *324* |
| *04.01.2021* | குறிப்பிட்ட தரத்தில் இல்லாமை காரணமாக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களில் ஒரு பகுதி திருப்பி அனுப்பப்பட்டது. (8% VAT நீங்கலாக) | *50* |
| *10.01.2021* | கட்டிடப் பொருட்கள் காசுக்கு விற்பனை (8% VAT உள்ளடங்கலாக) | *351* |
| *20.01.2021* | செலுத்திய உட்சுமைக் கூலிகள் | *10* |
| *30.01.2021* | செலுத்திய கட்டிட வாடகை | *6* |

(………..)

*03.* *2, 4, 10, 20* ஆகிய திகதிகளில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களைப் பதிவதற்கு அவசியமான மூல ஆவணங்களின் ஒழுங்கு வரிசை முறையே,

*1)* பட்டியல், வரவுத்தாள், பற்றுச்சீட்டு, கொடுப்பனவு உறுதிச்சீட்டு
*2)* பட்டியல், செலவுத்தாள், பட்டியல், கொடுப்பனவு உறுதிச்சீட்டு
*3)* பட்டியல் வரவுத்தாள், கொடுப்பனவு உறுதிச்சீட்டு, பட்டியல்
*4)* பட்டியல், கொடுப்பனவு உறுதிச்சீட்டு பட்டியல், வரவுத்தாள்
*5)* பட்டியல், செலவுத்தாள், கொடுப்பனவு உறுதிச்சீட்டு, பட்டியல் (………..)

*04.* 4ம் திகதிக்குரிய கொடுக்கல் வாங்கலுக்கான இரட்டைப் பதிவு யாது?

| | **வரவு '000' ரூபாவில்** | **செலவு '000' ரூபாவில்** |
|---|---|---|
| *1)* கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கு | *50* | |
| வெளித்திரும்பல் கணக்கு | | *50* |
| *2)* கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | *54* | |
| வெளித்திரும்பல் கணக்கு | | *54* |
| *3)* கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | *50* | |
| VAT கட்டுப்பாட்டுக் கணக்கு | *4* | |
| வெளித்திரும்பல் கண்க்கு | | *54* |
| *4)* கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | *50* | |
| VAT செலவினக் கணக்கு | *4* | |
| வெளித்திரும்பல் கணக்கு | | *50* |
| VAT கட்டுப்பாட்டுக் கணக்கு | | *4* |
| 5) கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | *54* | |
| VAT கட்டுப்பாட்டுக் கணக்கு | | *4* |
| வெளித்திரும்பல் கணக்கு | | *50* |

(………..)

05. 31.01.2021 இல் முடிவடைந்த மாத காலப் பகுதிக்கான மொத்த லாபம், தேறிய இலாபங்கள் முறையே,

| | **மொத்த இலாபம் "000" ரூபாவில்** | **தேறிய இலாபம் "000" ரூபாவில்** |
|---|---|---|
| 1) | 65 | 55 |
| 2) | 65 | 59 |
| 3) | 75 | 55 |
| 4) | 75 | 59 |
| 5) | 75 | 65 |

06. 31.01.2021 இல் கடன் கொடுத்தோர் தவிர்ந்த ஏனைய நடைமுறைப் பொறுப்புக்களின் பெறுமதி.
1) ரூபா 6000 2) ரூபா 24000 3) ரூபா 40000 4) ரூபா 10000 5) ரூபா 8000

(………..)

➢ **7ம், 8ம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

வணிகமானது தனது அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களையும் வங்கி நடைமுறைக் கணக்கினூடாக மேற்கொள்கின்றது. 2021 மார்ச் மாத முடிவில் காசுக் கட்டுப்பாட்டு க/கு மீதி வங்கிக்கூற்று மீதியுடன் இனங்காமைக்கான ஒரே ஒரு காரணம் மாற்றபபடாத காசோலை ரூபா 30500 மாத்திரமாகும்.

2021 ஏப்ரல் 30 இல் வங்கிக் கூற்றுப்படி மீதி ரூபா 500000 ஆனது அத்திகதியில் உள்ள காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியுடன் இணங்கவில்லை.

ஏப்ரல் மாத வங்கிக்கூற்றில் காணப்பட்ட விபரங்கள் அனைத்தினதும் சுருக்கம் வருமாறு.

| | |
|---|---|
| வரவு வைக்கப்பட்ட காசோலைகள் | 240000 |
| செலவு வைக்கப்பட்ட காசோலைகள் | 460000 |
| நிலையான கட்டளைக் கொடுப்பனவு வாடகை | 20000 |
| வங்கி விதிப்பனவு | 500 |

வங்கிக்கூற்றில் செலவு வைக்கப்பட்ட காசோலையில் கடன்பட்டோர் ஒருவரால் நேரடியாக வைப்புச் செய்யப்பட்ட காசோலை ரூபா 60000 உள்ளடங்கியுள்ளது.

2021 ஏப்ரல் 30 வசூலிக்கப்படாத காசோலை ரூபா 40000 ஆக காணப்பட்டது. மாற்றப்படாத காசோலை எவையும இருக்கவில்லை.

நிலையான கட்டளைக் கொடுப்பனவு, நேரடி வைப்புக்கள் வங்கி விதிப்பனவு போன்றவை வங்கிக்கூற்று பெறப்பட்ட பின்னரே கணக்குகளில் பதியப்படுகின்றன.

07. 2021 ஏப்ரல் 01 இல் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி யாது?
1) ரூபா 300500 2) ரூபா 270500 3) ரூபா 370000 4) ரூபா 520500 5) ரூபா 270000

(………..)

08. 2021 ஏப்ரல் மாதத்திற்கான காசுப் பெறுவனவு நாளேட்டின் மொத்தமும், காசுக் கொடுப்பனவு நாளேட்டின் மொத்தமும் யாது?

| | **காசுப் பெறுவனவு நாளேட்டின் மொத்தம் "000" ரூபாவில்** | **காசுக் கொடுப்பனவு நாளேட்டின் மொத்தம் "000" ரூபாவில்** |
|---|---|---|
| 1) | 440000 | 209500 |
| 2) | 270000 | 500500 |
| 3) | 500500 | 560500 |
| 4) | 560500 | 230000 |
| 5) | 500500 | 270000 |

(………..)

09. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) ஊழியரின பங்களிப்பு 10% தொழில் தருநர் பங்களிபபு 15% ஆகும். ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்பு (ETF) 3%மும் ஆகும். இவ் ஆண்டுக்கான EPF இற்கான ஊழியர் பங்களிப்பு ரூபா 30000 கழித்து ஊழியர் சம்பளம செலுத்தப்பட்டது. ஆண்டுக் காலத்தில் வருமானக் கூற்றில் ஊழியர் தொடர்பாக சாட்டுதல் செய்யப்பட வேண்டிய மொத்தச் செலவு யாது?

1) ரூபா 330000 2) ரூபா 354000 3) ரூபா 381000 4) ரூபா 330000 5) ரூபா 345000

(………..)

➢ **10ம், 11ம், 12ம் வினாக்களுக்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

மது, மதி ஆகியோரது பங்குடமையின நிபந்தனைகள் வருமாறு,

- ❖ இலாப நட்டங்கள் மது, மதி ஆகியோருக்கிடையே முறையே 2:1 என பகிரப்படும்.
- ❖ பங்காளர் ஒவ்வொருவரும் வருடாந்தம் ரூபா 300000 சம்பளத்திற்கு உரித்துடையவர்கள்.
- ❖ மூலதனத்திற்கு 10% வருடாந்த வட்டிக்கு உரித்துடையவர்கள்.

31.03.2021 இல் முடிவடைந்த வருடத்தில் செலுத்திய சம்பளங்கள், மற்றும் ஆண்டுக்காக தாக்கல் செய்யப்பட்ட மூலதன வட்டி விபரம் வருமாறு,

| | **மது** “000” ரூபாவில் | **மதி** “000” ரூபாவில் |
|---|---|---|
| செலுத்திய சம்பளம் | 200 | ? |
| மூலதன வட்டி | 30 | 20 |

நடைமுறைக் கணக்கு செலவு மீதிகள்

| | **31.03.2021 இல்** “000” ரூபாவில் | **31.03.2020 இல்** “000” ரூபாவில் |
|---|---|---|
| மது | 580 | 250 |
| மதி | 550 | 230 |

10. 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்தில் பங்குடமையின் இலாபம்

1) ரூபா 300000 2) ரூபா 950000 3) ரூபா 850000

6) 4) ரூபா 1130000 5) ரூபா 1010000

(………..)

11. 31.03.2021 இல் பங்குடமையின் உரிமையாண்மையின் பெறுமதி யாது?

**“000” ரூபாவில்**

1) 1130
2) 1330
3) 980
4) 900
5) 1630

(………..)

12. 31.03.2021 இல் முடிவடைந்த ஆண்டுக் காலப் பகுதியில் மதி காசாக பெற்றுக் கொண்ட சம்பளத் தொகை யாது?

**“000” ரூபாவில்**

1) 300
2) 280
3) 100
4) 200
5) 230

(………..)

13. காகிதாதி எழுது கருவி இருப்புக்களின் பெறுமதி குறைந்ததாக இருப்பின் அவ்விடயம் இருப்பாக அடுத்த ஆண்டிற்கு கொண்டு செல்லப்பட்டது கொள்வனவு செய்த ஆண்டிலேயே செலவாகக் காட்டப்படும். மேற்படி விடயம்

| | **முரனாக அமைந்த எண்ணக்கரு** | **பின்பற்றப்பட்ட எண்ணக்கரு** |
|---|---|---|
| 1) | அட்டுறு | தேறல் |
| 2) | இணைதல் | தேறல் |
| 3) | பொருண்மை | இணைதல் |
| 4) | இணைதல் | பொருண்மை |
| 5) | பொருண்மை | தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவம் |

(………..)

14. நலன்புரிச் சங்கமொன்று 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்தில் 100 அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது அங்கத்தவர் ஒருவருக்கான வருடாந்த சந்தா ரூபா 1500 ஆகும்.
31.03.2021 இல் சங்கத்தினால் பெறப்பட்ட காசு விபரங்கள்.

சந்தா 2019 – 2020 - 4500

சந்தா 2020 – 2021 - 120000

சந்தா 2021 – 2022 – 15000

2019 – 2020 ஆண்டுக்கான சந்தாவை இருவர் இதுவரை செலுத்தவில்லை எனவே இருவரதும் நிலுவைத் தொகைகள் ஆண்டுக் காலத்தில் பதிவளிக்க தீர்மானிக்கப்பட்டதுடன் அவர்களது அங்கத்துவமும் இரத்துச் செய்யப்பட்டது.
மேற்படி கொடுக்கல் வாஙகலினால 31.03.2021 முடிவடைந்த ஆண்டில் இனங்காணப்பட்ட சந்தா வருமானம்.

1) ரூபா 144000 2) ரூபா 150000 3) ரூபா 165000 4) ரூபா 154500 5) ரூபா 147000

(………..)

15. வணிகமொன்றின் கணக்குப் பதிவேடுகளில் இருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப் பட்டுள்ளன.

| | **31.03.2021 இல் '000' ரூபாவில்** | **31.03.2020 இல் '000' ரூபாவில்** |
|---|---|---|
| சொத்துக்கள் | 1700 | 1200 |
| பொறுப்புக்கள் | 900 | 700 |

31.03.2021 இல் முடிவடைந்த வருடத்தில் உரிமையாளர் தனது சொந்தப் பணத்தில் இருந்து வங்கிக் கடன் தவணைக் கட்டணம் ரூபா 80000 செலுத்தியிருந்தார். அத்துடன் சொந்தத் தேவைக்காக ரூபா 100000 பணத்தை நிறுவனத்தில் இருந்து எடுத்திருந்தார். 31.03.2021இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபமும் நிறுத்தி வைத்த வருவாயும் முறையே,

| | **ஆண்டுக்கான இலாபம் '000' ரூபாவில்** | **நிறுத்தி வைத்த வருவாய் '000' ரூபாவில்** |
|---|---|---|
| 1) | 800 | 700 |
| 2) | 500 | 600 |
| 3) | 400 | 300 |
| 4) | 320 | 220 |
| 5) | 480 | 380 |

(………..)

16. றமேஸ், உமேஸ், ராஜேஸ் ஆகியோரது பங்குடமையில் இருந்து 01.04.2020 உமேஸ் இளைப்பாறினார் அன்றைய தினம் நன்மதிப்புச் சீராக்கத்தின் பின் ரூபா 300000 மூலதன மீதியாக காணப்பட்ட அதேவேளை நடப்புக் கணக்கு மீதியானது ரூபா 50000 ஆகவும் காணப்பட்டது. பங்குடமை ஒப்பந்தத்தில் இளைப்பாறும் பங்காளருக்கான கடன் வட்டி வீதம் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. என்பதுடன் 31.03.2021 இல் முடிவடைந்த ஆண்டுக் காலப் பகுதிக்காக வட்டி செலுத்தப்படவுமில்லை.

அ) 31.03.2021 இல் முடிவடைந்த ஆண்டுக் காலப் பகுதிக்குரிய உமேஸ் கடன் வட்டிக்கான இரட்டைப் பதிவு யாது? (விளம்பல் அவசியமில்லை)

…………………………………………………………………………………………………….

……………………………………………………………………………………………………..

ஆ) மேற்படி வட்டி வீதத்தை தீர்மானிக்கும் சட்டமூலமும் அதன் பிரிவும்.

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………..

- **17ம், 18ம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

நிறுவனமொன்றில் கட்டுப்பாட்டுக் கணக்கு, பேரேட்டு மீதிகளை திருத்தம் செய்வதற்கு முன்னர் 31.03.2021 இல் தயாரிக்கப்பட்ட இணக்க கூற்று வருமாறு,

| | **'000' ரூபாவில்** |
|---|---|
| கடன்பட்டோர் பேரேட்டு மீதிகளின் மொத்தம் | 6000 |
| A காசுப் பெறுவனவு நாளேட்டின் கழிவு நிரல் கூட்டல் தவறு | (100) |
| B நபர் கணக்கில் பதிவு செய்யப்படாத அறவிட – முடியாக்கடன் | (500) |
| கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு மீதி | 5400 |

உட்திருப்பம் ரூபா 2000000 தவறுதலாக நாளேட்டில் 200000 என பதிவு செய்யப்பட்டது.

17. 31.03.2021 இல் திருத்திய கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியாது?...............................................

18. அ) மேற்படி தவறுகளைத் திருத்திய பின்னர் இலாபத்தில் ஏற்படும் அதிகரிப்பு or குறைவு யாது?

……………………………………………………………………………………………………

ஆ) தவறு A யினைத் திருத்துவதற்கான குறிப்பேட்டு பதிவினைத் தருக. (விளம்பல் அவசியமில்லை)

……………………………………………………………………………………………………

19. பல்லவன் என்பவரது நிறுவனத்தில் சிறு செலவுகள் தொடர்ந்து அதிகரித்து வருவதன் காரணமாகவும், நாட்டில் தற்போது காணப்படும் பணவீக்க நிலமை காரணமாக சிறு செலவுக் கட்டுநிதி மாதாந்தம் ரூபா 500 ஆல் அதிகரிப்புச் செய்யப்படும் எனும் நிபந்தனைகளுக்கு அமைய 01.01.2021 இல் சில்லறைக் காசாளர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.
மார்ச் மாதத்தின் சிறு செலவுக் காசுக் கொடுப்பனவு நாளேட்டின் பகுப்பாய்வு நிரல்களின் கூட்டுத்தொகை விபரம் வருமாறு.

| | |
|---|---|
| எழுது கருவி | 1450 |
| தபால் அஞ்சல் | 600 |
| உபசரணை | 1400 |
| சுத்திகரிப்பு | 750 |

மார்ச் 31 இல் சில்லறைக் காசு மீதி 800

அ) 01.01.2021 சில்லறைக் காசாளருக்கு வழங்கப்பட்ட முற்பணம் யாது?

…………………………………………………………………………………………………..

ஆ) 2021 ஏப்ரல் 01 இல் சிறு காசுக் கட்டு நிதி மீள் நிரப்பலுக்கான இரட்டைப் பதிவினை எழுதுக. (விளம்பல் அவசியமில்லை)

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

20. பின்வரும் கணக்கீட்டு நடவடிக்கைகளுக்கு மிகவும் பொருத்தமான கணக்கீட்டு எண்ணக் கருவைக் குறிப்பிடுக.

| **கணக்கீட்டு நடவடிக்கை** | **கணக்கீட்டு எண்ணக்கரு** |
|---|---|
| A. கடன்பட்டோரிடம் பெறவேண்டிய தொகை ஒன்றின் மீது ஐயக் கடனுக்கு ஒதுக்கீடு செய்தல் | |
| B. பங்குடமை ஒன்றில் பங்காளர் ஆயுள் நட்டஈட்டுத் தொகைக்கு பங்குடமை வியாபாரத்தின் பணத்தில் இருந்து செலுத்திய தொகை அவர்களது நடைமுறைக் கணக்கில் வரவிடப்பட்டது. | |
| C. விற்பனை அன்றேல் திருப்புக எனும் அடிப்படையில் அனுப்பப்பட்ட பண்டங்கள் விற்பனை வருமானமாக கருதப்படாமை | |
| D. ஒரே வகையான ஆதனம் பொறித்தொகுதி உபகரண மொன்றின் உருப்படி தொடர்பில் பெறுமானத் தேய்வானது ஒரே முறையினைப் பின்பற்றி கணிப் பிடுதல். | |

21. 01.04.2020 இல் ஆரம்பிக்கப்பட்ட உற்பத்தி நிறுவனமொன்றின் 31.03.2021 இல் முடிவடைந்த ஆண்டுக்கான தகவல்கள் வருமாறு,

| | '000' ரூபாவில் |
|---|---|
| மூலக்கிரயம் | 800 |
| மொத்த உற்பத்திக் கிரயம் | 1200 |
| உற்பத்தியல்லா மேந்தலைக் கிரயம் | 90 |
| 31.03.2021 இல் உள்ளவாறான (உற்பத்திக் கிரயத்தில் அளவிடப்பட்ட) நடைமுறை வேலை இருப்புக்கள் | 120 |

ஆண்டுக் காலப் பகுதியில் 2400 அலகுகள் உற்பத்தி செய்யபபட்டு 400 அலகுகள் தவிர மீதி அனைத்தும் ஒவ்வொன்றும் ரூபா 600 படி விற்பனை செய்யப்பட்டது.

வேண்டப்படுவது 31.03.2021 இல் முடிவடைந்த ஆண்டிற்கான.

அ) உற்பத்தி மேந்தலைக் கிரயம் ..................................................

ஆ) தேறிய இலாபம் ..................................................

22. வணிகமொன்றினால் பொதுப் பேரேட்டில் பராமரிக்கபபடும் பின்வரும் கணக்குகளிற்கான பொருத்தமான வகைப்படுத்தலைக் குறிப்பிடுக.

| கணக்குகள் | வகைப்படுத்தல் |
|---|---|
| A. ஆதனம் பொறித்தொகுதி உபகரணங்களின் திரண்ட தேய்வுக் கணக்கு | |
| B. வெளித்திரும்பல் கணக்கு | |
| C. ஊழியர் சம்பள முற்பணக் கணக்கு | |
| D. நிலையான வைப்புக் கணக்கு | |

23. வியாபாரமொன்றின் செம்மையாக்கற் பதிவுகள் தொடர்பான பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் T எனவும் பிழையாயின் F எனவும் குறிப்பிடுக.

| கூற்று | சரி / பிழை |
|---|---|
| A. மீள் விற்பனைக்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் அழிவடையுமாயின் அழிவடைந்த இருப்புக் கணக்கின் நட்ட மீதியினை வருமானக்கூற்றில் ஏனைய செலவுகளின் கீழ காட்டுதல் வேண்டும | |
| B. விற்பனை அன்றேல் திருப்புக எனும் அடிப்படையில் அனுப்பப்பட்ட இருப்பு நிறுவனத்தால் குறித்துரைக்கப்பட்ட திகதி வரையிலும் விற்பனையாகாது இருப்பது பற்றி வாடிக்கையாளர் அறிவித்துள்ளபோது அவ் இருப்புக்களின் உரிமையானது நிறுவனத்திற்குரியதாகும். | |
| C. தெரிந்தெடுக்கப்பட்ட சில கடன்பட்டோர்கள் நிதி நெருக்கடிகளை எதிர்கொள்வதாக அறியவரும்போது அவர்களிடம் இருந்து வருமதியான தொகைக்கு மேற்கொள்ளக்கூடிய ஒதுக்கீடு பொது ஐயக்கடன் ஒதுக்கீடு எனப்படும். | |
| D. கடன்பட்டோரிடம் இருந்து பெற்று காசோலை ஒன்று வங்கியில் வைப்பி லிட்டதன் பின்னர் மறுக்கப்படுமாயின் அதற்கான மூலப் பதிவுகள் பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படும். | |

24. பெறுமதி சேர் வரிக்கு (VAT) பதிவு செய்யப்பட்ட சுதாகர் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட கடன் விற்பனை தொடர்பில் வியாபார கழிவு 10% தை கருத்திற்கொள்ளாது பட்டியல் விலையான 960000 பெறுமதியே விற்பனைப் பெறுமதியாக தீர்மானிககப்பட்டு அதனடிப்படையில் VAT பெறுமதியும் கணிக்கப்பட்டு விற்பனைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு ஏடுகளில் பதிவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. VAT வீதம் 8% ஆகும்.

சுதாகர் நிறுவனத்தால் மேற்படி தவறினைத் திருத்துவதற்கான குறிப்பேட்டு பதிவு (விளம்பல் அவசியமில்லை.)

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

25. டிலான் வணிகத்தின் புத்தகங்களிலிருந்து பிரித்தெடுத்த தகவல்கள் வருமாறு,

| | ***31.03.2021 இல் (ரூபாவில்)*** | ***31.03.2020 இல் (ரூபாவில்)*** |
|---|---|---|
| வியாபார வருமதிகள் | *60000* | *70000* |
| ஐயக் கடன் ஒதுக்கீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பு / குறைவு | *(1000)* | *2000* |

*01.04.2019 இல் ஐயக்கடன் ஒதுக்கீட்டு மீதி ரூபா 3000*

*31.03.2021 இல் முடிவடையும் வருடத்தில் அறவிடமுடியாக் கடனாக ரூபா 4000 பதிவளிக்கப்படல் வேண்டும்*

வேண்டப்படுவது,

அ) 31.03.2021 இல் முடிவடைந்த ஆண்டுக்கான அறவிடமுடியா ஐயக்கடன் செலவு யாது?

……………………………………………………………………………………………

ஆ) 31.03.2021 இல் வியாபார வருமதிகளின் மீதி யாது?

……………………………………………………………………………………………

## பகுதி II

**அறிவுறுத்தல்கள்:**

- ❖ **முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**
- ❖ **ஒவ்வொரு வினாவுக்கும் புதிய தாளில் விடை எழுத ஆரம்பித்தல் வேண்டும்.**
- ❖ **உரிய செய்முறைகள் விடைத்தாளுடன் இணைக்கப்படல் வேண்டும்.**
- ❖ **இவ்வினாத்தாளுக்கு 200 புள்ளிகள் வழங்கப்படும்.**

*01. பொருட்களை உற்பத்தி செய்தும், அதே வகையான பொருட்களை கொள்வனவு செய்து விற்பனை செய்யும் ராம், ரகீம் என்போரின் பங்குடமையில் 2020 ஏப்ரல் 01 இல் றொபேட் என்பவர் பங்குடமையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். பின்னர் 2021- மார் 31 இல் ரகீம் பங்குடமையில் இருந்து ஓய்வு பெற்றார இம்மாற்றங்கள் தொடர்பான எந்தவிதமான சீராக்கங்களையும் செய்யாது றொபேடடினால் கொண்டு வரப்பட்ட காசும், ரகீமுக்கு செலுத்தப்பட்ட காசும் வெவ்வேறான கணக்குகளில் பதிவு செய்யப்பட்டன.*

*றொபேட் சேர்த்துக் கொள்ளப்படு முன்னர் ராம், ரகீம் இலாப நட்டங்களை முறையே 2:1 என பங்கிட்டிருந்தனர். றொபேட் சேரும்போதும், ரகீம் இளைப்பாறும் போதும் நிறுவனத்தின் நன்மதிப்பு முறையே ரூபா 120000 ஆகவும், ரூபா 220000 ஆகவும் மதிப்பிடப்பட்டன. நன்மதிப்பு தொடர்பான சீராக்கங்கள் பங்காளரின் மூலதனக் கணக்கினூடாக சீராக்கப்படுதல் வேண்டும்.*

*ராம், ரகீம், றொபேட் பங்குடமை ஒப்பந்த விபரம் வருமாறு:*

1) *ராம், ரகீம், றொபேட் இலாப நட்டங்களை முறையே 2:2:1 என பங்கீட்டுக் கொள்வர்.*
2) *பங்காளர் நன்மதிப்புச் சீராக்கத்தின் பின்பான மூலதன மீதிக்கு 10% வட்டிக்கு உரித்துடையவர்கள்.*
3) *ராம், ரகீம், றொபேட் ஆகியோர் ஆண்டுச் சம்பளமாக முறையே ரூபா 14000, ரூபா 12000, ரூபா 11000 பெறுவதற்கு உரித்துடையவர்கள்.*

*ரகீம் இளைப்பாறிய பின்னர் ராம், றொபேட் இலாப நட்டங்களை சமனாக பங்கீட்டுக் கொள்வதற்கு உடன்பட்டனர். அத்துடன் ரகீமுக்கு செலுத்த வேண்டிய மீதித் தொகை கடன் கணக்கிற்கு மாற்றப்படும்.*

**2021 மார்ச் 31 இல் பரீட்சை மீதி வருமாறு**

| விபரம் | வரவு "000" ரூபாவில் | செலவு "000" ரூபாவில் |
|---|---|---|
| மூலதனக் கணக்கு ராம் | | 158 |
| ரகீம் | | 138 |
| றொபேட்டினால் கொண்டுவரப்பட்ட காசு | | 134 |
| ரகீமுக்கு வழங்கப்பட்ட காசு | 100 | |
| நடைமுறைக் கணக்கு ராம் | | 12 |
| ரகீம் | 8 | |
| உற்பத்திக் கிரயம் | 200 | |
| 2021 மார்ச் 31 இல் இருப்புக்கள் | | |
| மூலப்பொருட்கள் | 30 | |
| குறைவேலை | 17 | |
| 2020 ஏப்ரல் 01 இல் பொருட்கள் இருப்பு (உற்பத்தி செய்யப்பட்டவையும், கொள்வனவு செய்யப்பட்டவையும்) | 50 | |
| 2020 ஏப்ரல் 01 இல் பொறித் தொகுதியும், திரண்ட தேய்வும் | 300 | 50 |
| 2020 ஏப்ரல் 01 இல் மோட்டார் வாகனமும் திரண்ட தேய்வும் | 200 | 60 |

| | | |
|---|---|---|
| நிர்வாக ஊழியர் சம்பளம் | 10 | |
| பொருட்கள் கொள்வனவு | 120 | |
| விற்பனைகள் | | 820 |
| காசு | 417 | |
| 8% வங்கிக் கடன் | | 150 |
| வியாபார வருமதியாளர், செய்மதியாளர் | 40 | 30 |
| வாடகை | 60 | |
| | 1552 | 1552 |

பின்வரும் மேலதிக தகவல்களையும் கருத்திற் கொள்க.

1) 2021 மார்ச் 31இல் பொருள் இருப்புக்களின் (உற்பத்தி செய்த முடிவுப் பொருட்களும், கொள்வனவு செய்யப்பட்டவையும்) கிரயமானது ரூபா 40000 ஆகவும் அதன் தேறிய தேறத்தக்க பெறுமதி ரூபா 30000 ஆகவும் மதிப்பிடப்பட்டது.
2) மோட்டார் வாகனம் பொருட்களை விநியோகம் செய்வதற்கு பயன்படுத்தப்படுகின்ற அதேவேளை பொறித்தொகுதியானது உற்பத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப் படுகின்றது.
3) வாடகையில் $\frac{4}{6}$ பகுதி தொழிற்சாலைக்கு உரியதாகும்.
4) 2021 மார்ச் 31இல் நிலுவை நிர்வாக ஊழியர் சம்பளம் ரூபா 18000
5) நிறுவனம் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கு கிரயத்தில் 10% பெறுமானத் தேய்விடுகின்றது.

வேண்டப்படுவது,

1) 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்குடமையின் வருமானக் கூற்று (பங்காளரிடையே மேற்கொள்ளப்பட்ட பகிர்வுகள் உட்பட)
2) 2021 மார்ச் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்காளர் மூலதனக் கணக்கும், பங்காளர் நடைமுறைக் கணக்கும்.
3) 2021 மார்ச் 31 இல் உள்ளவாறான பங்குடமையின் நிதிநிலமைக் கூற்று,

02. நளாயினி புடவை வணிகத்தின்
ஏடுகளில் 2021.04.01 இல் காணப்பட்ட மீதிகள் வருமாறு,

| | **"000" ரூபாவில்** |
|---|---|
| ஆதனம் பொறித்தொகுதி உபகரணங்கள் | 800 |
| புடவை இருப்புக்கள் | 900 |
| வியாபார வருமதியாளர் | 400 |
| வங்கி மீதி | 600 |
| 6% வங்கிக் கடன் | 600 |
| வழங்குநர் ஒருவருக்கு செலுத்தப்பட்ட முற்பணம் | 100 |
| வியாபார சென்மதியாளர் | 70 |
| சென்மதி சம்பளம் | 50 |
| வாடகை முற்பணம் | 2 |

ஏப்ரல் மாதம் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல் விபரம் வருமாறு,

1) வயோதிபர் இல்லத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட புடவைகளின் கிரயம் ரூபா 80000
2) ரூபா 300000 பெறுமதியான புடவைகள் காலங் கடந்தவையாக காணப்பட்டமையினால் ரூபா 200000 இற்கு காசிற்கு விற்பனை செய்யப்பட்டது.
3) ரூபா 200000 பெறுமதியான புடவைகளின் பொதியிடலில் குறைபாடுகள் காணப்பட்டமை யால் ரூபா 20000 செலவில் மீண்டும் பொதி செய்யப்பட்டு ரூபா 200000 இற்கு விற்பனை செய்யப்பட்டது.
4) புடவைகள் கொள்வனவு ரூபா 150000 ஆகும் ஆரம்பத்தில் காணப்பட்ட வழங்குநர் முற்பணம் இது தொடர்புடையதாக இருப்பதுடன் மீதித் தொகை காசாக செலுத்தப்பட்டது.

5) ரூபா 100000 பெறுமதியான வருமதியாளர ஒருவரிடம் இருந்து ரூபா 85000 பெறப்பட்டது மீதி அறவிடமுடியாக் கடனாக பதிவளிக்கப்பட்டது.

6) சம்பளம் 1 மாத நிலுவை அடிப்படையில் செலுத்தப்படும. கடந்த மாத சம்பளம் இம்மாதம் செலுத்தப்பட்டது. இம்மாதத்திற்கான சம்பள செலவு ரூபா 60000 ஆகும்.

7) கடனடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட தளபாட உபகரணங்களின் பெறுமதி ரூபா 200000 ஆகும் இதனைக் கொண்டு வருவதற்கும் பொருத்துவதற்கும் ரூபா 20000 காசாக செலவு செய்யப்பட்டது.

8) ரூபா 300000 கிரயமான புடவைகள் ரூபா 500000 காசிற்கு விற்பனை செய்யப்பட்டது.

9) வங்கிக் கடன் மாதாந்த தவணைக் கட்டணம் ரூபா 103000 செலுத்தப்பட்டது இதனுள் உள்ளடங்கியுள்ள வட்டித் தொகை ரூபா 3000 ஆகும்.

வேணடப்படுவது,

மேற்படி கொடுக்கல் வாங்கல்களை கீழ்வரும் கணக்கீட்டு சமன்பாட்டு மாதிரியில் பதிவு செய்து பெறுமதி கூடுமாயின் + எனவும. பெறுமதி குறைவடையுமாயின் எனவும் அவ்அவ்பெறுமதிக் கெதிரே குறிப்பிடுக.

| | சொத்துக்கள் | | | | பொறுப்புக்கள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆதனப்பொறி உபகரணம் | இருப்பு | வியாபார வருமதியாளர் | முற்கொடுப்பனவும முற்செலுத்தியவையும் | காசு | வியாபார சென்மதியாளரும், ஏனைய சென்மதிகளும் | நீண்ட கால கடன் | உரிமையாண்மை |
| ஆரம்ப மீதி | | | | | | | | |
| கொடுக்கல் வாங்கல் | | | | | | | | |
| இறுதி மீதி | | | | | | | | |

03. வரையறுத்த சாலமன் கம்பனியானது பெறுமதி சேர் வரிக்காக (VAT) பதிவு செய்யப்பட் டுள்ள கம்பனியாகும். பின்வரும் தகவல்கள் 31.03.2021 இல் முடிவடையும். மாதத்திற்காக கம்பனியின் கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் பேரேடுகளில் இருந்து பிரித்தெடுக்கப் பட்டவையாகும்.

31.03.2021 இல் கடன்பட்டோர் பேரேடு "000" ரூபாவில்

| விபரம் | சேரன் | சோழன் | பாண்டியன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஆரம்ப மீதி | 200 | 100 | (50) | 250 |
| விற்பனை (8% VAT உட்பட) | 270 | 378 | 432 | 1080 |
| காசுப் பெறுவனவு | (300) | (95) | (300) | (695) |
| அனுமதித்த கழிவு | (20) | (5) | (20) | (45) |
| | 150 | 378 | 62 | 590 |

**31.03.2021 கடன்கொடுத்தோர் பேரேடு "000" ரூபாவில்.**

| விபரம் | அசோகன் | அசேலன் | ஆதித்யன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஆரம்ப மீதி | 80 | 120 | 60 | 260 |
| கொள்வனவு (8% VAT உட்பட) | 162 | 216 | 432 | 810 |
| காசுக் கொடுப்பனவு | (79) | - | (485) | (564) |
| பெற்ற கழிவு | (1) | - | (13 | (14) |
| வெளித் திருப்பம் (8% VAT உட்பட) | - | (27) | (54) | (81) |
| | 162 | 309 | (60) | 411 |

*01.03.2021* இல் உள்ளபடியான கடன்பட்டோர், கடன் கொடுத்தோர் பட்டியல் மீதிகளின் மொத்தமானது இத்திகதியில் அந்தந்த கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகளுடன் இணங்கி யிருந்தன எனினும் *31.03.2021* இல் கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் பட்டியல் மீதிகளுடன் இணங்கவில்லை பிற்பட்ட பரிசீலனை பின்வரும் தவறுகளையும் விடுபாடுகளையும் வெளிப்படுத்தியது.

1) சேரன் திரும்பி அனுப்பிய பொருட்களின் பெறுமதி 8% VAT உள்ளடங்கலாக ரூபா *81000* உட்திரும்பல் நாளேட்டில் பதிவு செய்யப்படவில்லை.
2) அசோகனுக்கு கொடுத்த காசு *97000* ஆகும். இது காசுக் கொடுப்பனவு நாளேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது எனினும் தனிப்பட்ட கணக்கில் ரூபா *79000* ஆக பதியப்பட்டிருந்தது.
3) காசுக் கொடுப்பனவு நாளேட்டின் கழிவு நிரலின் கூட்டுத்தொகை ரூபா *10000* கூடுதலாக கூட்டப்பட்டிருந்தது.
4) பாண்டியனுக்கு 8% VAT உள்ளடங்கலான விற்பனை ரூபா *108000* பாண்டியனது தனிப்பட்ட கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.
5) அசோகனுக்கு திருப்பி அனுப்பிய சரக்கு VAT உள்ளடங்கலாக ரூபா *270000* நாளேட்டில் பதிவு செய்யப்படவில்லை.
6) சோழனிடம் இருந்து பெற்று அசேலனுக்கு வழங்கிய காசு ரூபா *64000* காசுக் கொடுப்பனவு நாளேட்டில் பதிவு செய்யப்பட்டபோதிலும் அசேலனது தனிப்பட்ட கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. காசுப் பெறுவனவு தொடர்பாக எந்தவிதமான ஏடுகளிலும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

   ஏனைய காசுப் பெறுவனவு விபரம் வருமாறு,

   காசு விற்பனை 8% VAT உள்ளடங்கலாக ரூபா *594000*

வேண்டப்படுவது,

*2021* மார்ச் மாதத்திற்கான

1) காசுப் பெறுவனவு நாளேடு (விடுபட்ட பதிவுகள் சேர்ககப்படல் வேண்டும்)
2) திருத்தங்களிற்கு முன் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு
3) திருத்தங்களிற்கு முன் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு
4) திருத்திய கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு
5) திருத்திய கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கு
6) விற்பனை நாளேடு

*04.* ஆதவன் என்பவர் சில்லறை வியாபார நிறுவனமொன்றை நடாத்தி வருகின்றார் அவர் முறையான கணக்குப் பதிவேடுகள் எவற்றையும் அவர் பேணவில்லை அவரது கணக்கு ஏடுகளில் இருந்து கீழ்வரும் மீதிகளும், காலப் பகுதிக்கான பூரணப்படுத்தப்படாத காசுக் கொடுப்பனவு நாளேடும், வங்கியால் அனுப்பப்பட்ட வங்கிக் கூற்றும் கிடைக்கப்பெற்றது.

| | 31 மார்ச் 2021 | 28 பெப் 2021 |
|---|---|---|
| இருப்புக்கள் | 16800 | 8600 |
| வியாபார வருமதியாளர் | 4300 | 3900 |
| வியாபார சென்மதியாளர் | 8900 | 7400 |
| வாடகை முற்பணம் | 420 | 300 |
| மின்கட்டண நிலுவை | 160 | 210 |
| வங்கி மீதி | ? | 2660 |

விற்பனைகள், கொள்வனவுகள் அனைத்தும் கடனுக்கே மேற்கொள்ளப்படுகின்றன. கடன்பட்டோரிடம் இருந்து கிடைக்கப் பெறுகின்ற காசோலைகள் உடனடியாக வங்கியிடப் படுகின்றன கிடைக்கப் பெறுகின்ற காசில் இருந்து சொந்தத் தேவைக்காக எடுத்தது போக மீதித் தொகை அனைத்தும் வங்கியிலிடப்பட்டுள்ளன. துர்அதிர்ஷ்டவசமாக சொந்த தேவைக்கு காசாக பற்றிய தொகையை அவரால் கணிப்பிடமுடியாது இருந்தது. எவ்வா றெனினும் குறிப்பிட்ட காலப் பகுதி யில் ரூபா 600 கொள்விலையான பண்டங்களையும் அவர் எடுத்திருந்தார்.

கடன்பட்டோரிடம் இருந்து கிடைக்கப்பெறும் தொகைகள் தவிர்ந்த வேறெந்த பெறுவனவு களும் காணப்படாத காரணத்தால் அவர் காசுப் பெறுவனவு நாளேட்டைத் தயாரிக்கவில்லை

**2021 மார்ச் மாதத்திற்கான காசுக் கொடுப்பனவு நாளேடு**

| திகதி | விபரம் | பெறுமதி | பகுப்பாய்வு நிரல் | | |
|---|---|---|---|---|---|
| | | | கடன்கொடுத்தோர் | செலவீனம் | ஏனைய கொடுப்பனவு |
| *04.03.2021* | வாடகை *11071* | *5040* | | *5040* | |
| *07.03.2021* | மின் கட்டண *11072* | *1390* | | *1390* | |
| *14.03.2021* | சம்பளம் *11073* | *1200* | | *1200* | |
| *20.03.2021* | கடன் கொடு *11074* | *51800* | *51800* | | |
| *26.03.2021* | கடன் கொடு *11075* | *51500* | *51500* | | |
| | பற்று - | ? | | | ? |
| | | | *103300* | *7630* | ? |

**2021 மார்ச் மாதத்திற்கென வங்கியால் அனுப்பப்பட்ட வங்கிக் கூற்று**

| திகதி | விபரம் | வரவு | செலவு | மீதி |
|---|---|---|---|---|
| *01.03.2021* | மீதி | | | *2660* |
| *03.03.2021* | காசோலை *18176* | | *50000* | *52660* |
| *05.03.2021* | காசோலை *11071* | *5040* | | *47620* |
| *09.03.2021* | காசோலை *11072* | *1390* | | *46230* |
| *12.03.2021* | காசு வைப்பு | | *5000* | *51230* |
| *15.03.2021* | வங்கிக் கட்டணம் | *2000* | | *49230* |
| *17.03.2021* | *19132* | | *40000* | *89230* |
| *20.03.2021* | காசு வைப்பு | | *27600* | *116830* |
| *24.03.2021* | *11074* | *51800* | | *65030* |
| *27.03.2021* | காசோலை புத்தக கட்டணம் | *330* | | *64700* |

குறிப்பிட்ட காலப் பகுதியில் வசூலிக்கப்படாத காசோலைகள் எவையும் காணப்படவில்லை. அத்துடன் விற்பனை விலையானது கொள்விலையுடன் $33\,^1/_3\,\%$ இலாபம் சேர்த்து தீர்மானிக்கப்படு கின்றது.

வேண்டப்படுவது,

i) கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு

ii) *2021* மார்ச் மாதத்திற்கான இலாப or நட்டக்கூற்று

iii) மார்ச் மாதத்திற்கான காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (திருத்தமுன்)

iv) திருத்திய காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு

v) வங்கிக் கணக்கிணக்க கூற்று

vi) *31.03.2021* இல் நிறுவனத்தின் உரிமையாண்மைத் தொகை. (20 புள்ளிகள்)

05. ஆதித்யா வியாபார நிறுவனத்தின் வரைபு நிதிக்கூற்றில் 31.03.2021 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபம் ரூபா 400000 ஆக காட்டப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்திற்கான வரைபு நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது பின்வரும் விடயங்கள் கருத்திற் கொள்ளப்படவில்லை என்பது பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

1) 31.03.2021 இல் இருப்புக்களின் கிரயப் பெறுமதி ரூபா 40000 ஆகவும் அதன் தேறிய தேறத்தக்க பெறுமதி ரூபா 38000 ஆகவும் காணப்பட்டது. எவ்வாறெனினும், இருப்பின் பெறுமதி கிரயப் பெறுமதியிலேயே காட்டப்பட்டுள்ளது.
2) 01.10.2020 இல் இருந்து தொடங்கும் 15 மாதங்களுக்காக செலுத்தப்பட்ட வாடகை ரூபா 30000 வாடகைச் செலவினமாக வருமானக்கூற்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.
3) பெறப்பட்ட விற்பனை முற்பணம் ரூபா 50000 விற்பனைக் கணக்கு செலவு வைக்கப்பட்டுள்ளது.
4) நிறுவனம் ஆண்டின் இறுதித் திகதியில் ரூபா 100/=படி இரண்டு துளையிடும் கருவிகளைக் கொள்வனவு செய்தது இது அலுவலக உபகரணக் கணக்கு வரவு வைக்கப்பட்டுள்ளது.
5) உரிமையாளரின் வீட்டு மின்கட்டணமாக செலுத்தப்பட்ட தொகை ரூபா 5000 காசுக் கொடுப்பனவு நாளேட்டின் செலவுகள எனும் பகுப்பாய்வு நிரலில் இடப்பட்டிருந்தது.
6) மோட்டார் வாகனங்களுக்கான இறக்குமதித் தடை காரணமாக மோட்டார் வாகனங்களின் பெறுமதி அதிகரித்து வருகின்ற காரணத்தால் நிறுவனத்தில் காணப்படும் ரூபா 500000 பெறுமதியான மோட்டார வாகனங்களுக்கு இவ்வாண்டுக்கு பெறுமானத் தேய்விடப்படவில்லை.
7) நிறுவனம் ஆதனம் பொறித்தொகுதி உபகரணங்களுக்கு கிரயத்தில் 10% பெறுமானத் தேய்விடுவது வழக்கமாகும்.
8) 01.01.2021 இல் மேற்கொள்ளப்பட்ட இயந்திர திருத்தச் செலவு ரூபா 20000 இயந்திரக் கணக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது,

1) தவறுகளைத் திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகள்
2) மேற்படி ஒவ்வொரு சந்தர்ப்பங்களின் போதும் மீறப்பட்ட கணக்கீட்டு எண்ணக் கருக்களைத் தருக.

06. பின்வரும் தகவல்கள் பாரதி விளையாட்டுக் கழகத்தின் ஏடுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டவை யாகும்.

| | **31.03.2021**<br>**"000" ரூபாவில்** | **31.03.2020**<br>**"000" ரூபாவில்** |
|---|---|---|
| திரண்ட நிதி | ? | 1456 |
| ஆயுள் அங்கத்துவ நிதி | ? | 450 |
| காசு | ? | 2834 |
| விளையாட்டு உபகரண நிதி | ? | 360 |
| கட்டிட நிதியம் | ? | 900 |
| சந்தா நிலுவை | ? | 12 |
| விளையாட்டு உபகரணங்கள் | 495 | 320 |

| **ஆண்டுக்கான காசுப் பெறுவனவுகள்** | **"000" ரூபாவில்** |
|---|---|
| காசா கிடைத்த சந்தா – 2019 / 2020 | 6 |
| காசா கிடைத்த சந்தா – 2020 / 2021 | 300 |
| காசா கிடைத்த சந்தா – 2021 / 2022 | 18 |
| ஆயுட் சந்தா | 300 |
| தடகள உடை விற்பனை வருமானம் | 150 |
| | 774 |

**ஆண்டுக்கான காசுப் கொடுப்பனவுகள்**

| | |
|---|---|
| புதிய கட்டிட கிடைப்படத்திற்காக செலுத்தியது | *20* |
| இதுவரை மேற்கொள்ளப்பட்ட கட்டிட வேலைகளுக்காக கட்டிட ஒப்பந்ததாரருக்கு செலுத்தியது | *400* |
| விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு | *180* |
| தேநீர் விருந்துபசார செலவுகள் | *12* |
| தடகள உடை கொள்வனவு | *120* |
| | *732* |

**மேலதிக தகவல்கள்**

1) ஆயுட் சந்தாத்திட்டம் *01.04.2019* இல் தொடக்கப்பெற்றது ஒருவர் இத்திட்டத்தில் சேரும்போது ரூபா *50000* ஐச் செலுத்துதல் வேண்டும் கழகத்தால் இத்தொகை *10* வருடங்களுக்கு சமமான வருமானமாக இனங் காணப்படும் 2019/2020 காலப் பகுதியில் இத்திட்டத்தில் *10* அங்கத்தவர்கள் இணைந்திருந்தனர்.
2) அங்கத்தவர் ஒருவரின் வருடாந்தச் சந்தா ரூபா *6000* ஆகும் கழகத்தில் ஆயுள் அங்கத்தவர்கள் நீங்கலாக *60* அங்கத்தவர்கள் காணப்படுகின்றனர். நிலுவைச் சந்தாத் தொகையானது ஆகக் கூடியது *12* மாதங்களுக்கு முன்கொண்டு செல்லப்படும்.
3) ஆண்டுக்காலத்தில் நடைமுறையல்லாச் சொத்துக்கள் கொள்வனவிற்காக செலுத்திய தொகை அந்தந்த நிதியங்களூடாக பெறப்பட்டது. அத்துடன் பெறப்பட்ட நன்கொடைகள் அவற்றின் பயன்பாட்டின் அளவின் அடிப்படையில் வருமானமாக இனங்காணப்படும்.
4) கழகமானது *300* தடகள உடைகளை ஒவ்வொன்றும் ரூபா *400* படி காசுக்கு கொள்வனவு செய்தது. இதற்கு கழக இலட்சனையும் பெயரும், பொறித்தமைக்காக தேவி பிறிண்டேர்ஸ் நிறுவனத்திற்கு தடகள உடைக்கு ரூபா *100*படி கொடுக்க வேண்டியுள்ளது. இத்தடகள உடைகளில் *250* உடைகள் வீரர்களுக்கு ஒன்று ரூபா *600*படி காசுக்கு விற்பனை செய்யப்பட்டன.

**வேண்டப்படுவது,**

1) தடகள உடை விற்பனை வருமானக்கூற்று
2) *31.03.2021* இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக்கூற்று
3) *31.03.2021* இல் உள்ளவாறான கழகத்தின் நிதி நிலமைக்கூற்று